# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

26-6-66

விலை 20 காசு



நாவலரிடம் லண்டன் தமிழ்ச்சங்கம் எம்.ஜி.ஆருக்கு அளித்த சிலையை வழங்கும் விழா

# கேள்வி--பதில்!

**(1) திருவள்ளுவர் சிலை சென்னையில் அமைந்திருப்பது தமிழர்க்குப் பெருமைதானே!**

சந்தேகமென்ன! ஆனல், தமிழரின் பெருமிதம் மேலும் வளருவதற்காக, மதுரையில் அமையும் தமிழ்ப் பல்கலைக்கழக முன்வாயிலில், எடுப்பான இடத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கவேண்டும் என்று நினைக்கிறேன். தே. பொ. மீனாட்சிசுந்தரனார் இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும்.

**(2) எனக்குப் பிடித்தமான அரசியல் தலைவர் காமராஜரே என்று தமிழ்ப்பெரும புலவரொருவர் கூறியிருக்கிறாரே, என்ன எண்ணுகிறீர்?**

ஐயோ! பாவம்! அந்தப் பெரும் புலவர் அப்படிப் போற்றி அந்தாதி பாடினரே தவிர, எனக்குப்பிடித்தமான தமிழ்ப் பெரும் புலவர் இவரே என்று காமராஜர் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா—காணேமே என்று எண்ணி அனுதாபப்படுகிறேன்.

**(3) அசோக்மேத்தா சொன்னதைச் சாதிப்பாரா?**

சாதித்துக் காட்டிவிட்டாரே—அமெரிக்க அரசுக்குச் சொன்னதை! ரூபாயின் மதிப்பைக் குறைக்கச் சொன்னார்கள்—ஆகட்டும் என்றார்-இப்போது சாதித்து விட்டாரே! இன்னமுமா சந்தேகம். உமக்கு இருக்கலாம். ஆனல் அமெரிக்க அரசுக்கு அந்தச் சந்தேகம் வராது.

**(4) கேரள விவகாரம்பற்றி இப்போது பட்டீல் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறாராமே, ஏன் காமராஜரிடம் அந்தப் பொறுப்பு இல்லை!**

சட்டி சுட்டதடா கைவிட்டதடா! என்ற பாட்டுத்தெரியாதா உமக்கு. எத்தனைத்தடவை ஒருவரே முகத்தில் கரிபூசிக்கொள்வது. அதனல்தான் இந்தத் தடவை அந்தச் ‘சான்சு’ பட்டீலுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**(5) மறுபடியும் காங்கிரசே ஆட்சிக்கு வந்தால என்ன ஆகும்?**

வாரத்தில் ஒரு நாள் ‘விரதம்’ என்பது மாறி வாரத்தில் ஒரு நாள் உணவு!! என்ற திட்டம் வரலாம் என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள்.

**(6) தாம்பரத்தில் பூமி அதிர்வதற்குக் காரணம் என்ன?**

நம்ம டி. டி. கேயை அநியாயமாக வீட்டுக்கு அனுப்பிவிட்டது பூமாதேவிக்கே பொறுக்கல்லே, குமுறிக் குமுறி அழுகிறாள், அதுதான் அதிர்ச்சிக்குக் காரணம் என்கிறார் ‘கிரைப்வாடர்’ கடைக்காரர் ஒருவர்.

**(7) புட்டோ இந்தோனேஷியா போகிறாராமே, எதற்காக?**

சுகர்னேவைத் துக்கம் விசாரித்துவிட்டு வருவதற்காக இருக்கலாம்.

**(8) தி. மு. க. நாட்டுக்குத் தேவையே இல்லாத கட்சி என்று கனம். கக்கன் பேசி இருக்கிறாரே, பார்த்தீரா?**

பார்த்தேனே! அதே பத்திரிகையில் கனம் கக்கன் பேச்சுக்குப் பக்கத்திலேயே தி. மு. க. தலைவர்களைக் கனம் இந்திரா காந்தி அவர்கள் ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதுபற்றிக் கலந்து பேச அழைத்திருக்கிற செய்தியும் போடப்பட்டிருக்கிறது; அதைப் பார்த்தீரா?

**(9) பத்துவருடம் பதவிவகித்தவர்கள் பதவியில் இருக்கக் கூடாது, விலகிவிடவேண்டும் என்று ஆந்திரக் காங்கிரஸ் தலைவர் சஞ்சீவரெட்டியார் பேசியிருக்கிறாரே, பார்த்தீரா?**

கனம். பக்தவத்சலத்தைப் பார்க்கச் சொல்லுமய்யா! நானும் நீங்களும் பார்த்து என்ன பயன்?

**(10) எந்தக் கட்சியும் எனக்குப் பிடிப்பதில்லை, ஆகவேதான் நான் எந்தக் கட்சியிலும் சேரவில்லை என்று இங்கு ஒருவர் சொல்கிறார், வேடிக்கையாக இல்லையா?**

பூ! இதிலென்ன வேடிக்கை. இங்கே ஒருவர் இருக்கிறார், நான் வீட்டிலே சாப்பிடுவதே இல்லை; ஏனென்றால் எனக்கு வீடே இல்லை என்று பேசுகிறார்; அதை விடவா வேடிக்கை நீர் சொல்வது.

**(11) எத்தனைப் பெரிய தலைவராகட்டும், எத்தனைப்பெரிய கட்சியாகட்டும், நான் விடுவதில்லை; குடைந்தெடுப்பேன் என்று பேசுகிறார் ஒருவர் இங்கு-வீரர்தானே அவர்?**

‘அவர்’ என்றுதானே சொல்கிறீர். ‘இன்னர்’ என்று சொல்லக் கூட இல்லையே! பாவம்! அந்த ‘அவர்’ அப்படிப்பட்டவர் போலும்! போகட்டும், இதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா! இது ஒரு வீரச்சின்னம்பற்றிய தகவல்! ஒரு வீரச்சின்னத்திலே பொறிக்கப்பட்டிருந்ததாம் இங்கு எட்டு மேஜர்கள், பதினறு கர்னல்கள், இருபத்தி ஆறு சுபேதார்களை உதைத்துக் கீழே வீழ்த்திய **மாகி** அடக்கம் செய்யப் பட்டிருப்பதை அறியவும்என்று!

**மாகி** யார் தெரியுமா? பட்டாளத்தில் இருந்த கோவேறுக் கழுதை! அது பலபேர்களை எட்டி உதைத்திருக்குமல்லவா! அதை நகைச்சுவையுடன் எடுத்துக்காட்டிற்று நினைவுச்சின்னம்.

**(12) அதுல்யா கோஷ் சென்னை வந்திருந்தாரே, அவர் எப்படிப்பட்டவர்?**

அதைத் தெரிந்துகொள்ளவேண்டுமானல், அதுல்யா கோஷுக்கு எதிராக வங்காளக் காங்கிரஸ் என்ற போட்டிக் காங்கிரசை நடத்துகிறாரே **அஜாய் குமார் முகர்ஜி** அவரை வரவழைத்துப் பேசச் சொல்லவேண்டும். அப்போது புரியும்!

**(13) சிலபல தொழில்களின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையைத் தளர்த்தி புதிய கொள்கைப் பிரகடனம செய்துள்ளார்களே, இது எதைக் காட்டுகிறது?**

இன்னும் சில மாதங்களில், இந்த நாட்டு அரசியல் சட்டத்தையே மாற்றிப் **புதுக்கொள்கை** வகுக்கத் தயார்! தயார்!! என்று அறிவிக்கலாம் என்று நீர் எண்ணுகிறீரோ?

o

## அகந்தை கொண்டவன்!

ரதத்தின்மீது அமர்ந்திருக்கும் "ஈ" என்னுல் எவ்வளவு புழுதி கிளம்புகிறது என்று எண்ணுகிறது; பெரும் காரியங்கள் நடைபெறுகிறபொழுது தன்னுலதான் அது நடப்பதாக அகந்தைகொண்டவன் எண்ணுகிறுன்.

— பேகன்.


# காஞ்சி

மலர் 2 26—6—66 இதழ் 48


# சித்திரம் புரிகிறதா?

"சார்! உடம்புக்கு ஒண்ணுமில்லே! ஏதோ சோம்பல்போல இருக்கு! ஒரு நல்ல **டானிக்** எழுதிக் கொடுங்களேன்!

"ஆஹா! 'டானிக்' கொடுக்கிறதிலே நான் பேர் போனவனுச்சே! தர்ரேன்!

—டாக்டர் எழுதிக் கொடுக்கிருர். மூன்று மாதத்துக்குப் பிறகு—

"சார்! வயித்து வலி பொறுக்கலே! குமட்டல் குமட்டலா வருது!! உடம்பெல்லாம் வலிக்குது; கண் எரிச்சல், திறக்கவே முடியலே!"

"எவ்வளவு நாளா இப்படி இருக்கு?"

"மூணு மாசமா இருக்கு சார்! அம்மா...முதுகு நரம்பைப் பிடிச்சி இழுக்குது சார்!...ஆ, நாக்கு வரட்சி, பேசக்கூட முடியலியே"

"சரி, சரி! கொஞ்சம் அப்படிப் போய் உட்கார்!"

நோயாளியை அமரக் கூறிவிட்டு, டாக்டர் தன் இடத்தில் சென்று அமர்ந்தார்.

ஏழெட்டுப் புத்தகங்களைப் புரட்டினுர். அங்கு மிங்கும் சிதறிக் கிடந்த சில 'கேட்லாக்கு'களைத் தேடியெடுத்துத் துருவித் துருவி ஆராய்ந்தார்.

**வயிற்று வலி; குமட்டல்; உடம்பு வலி; கண் எரிச்சல்; முதுகு வலி; நாக்கு வரட்சி; வாந்தி; நரம்பு இழுப்பு.**

—இப்படிப்பட்ட குணமுடைய நோய்க்கு ஏதாவது பெயருண்டா? இதற்கு முன் இவையெல்லாம் கலந்த நோய் யாருக்காவது வந்து, அவர் குணம் பெற்ற முன் அனுபவம் எவருக்கேனும் இருக்கிறதா?

டாக்டரால் புரிந்துகொள்ள முடியவில்லை. வியாதியை நினைத்துப் பார்த்தால், அவருக்கே தலை சுற்றும் நிலைவரும் போலிருந்தது.

கவலை படர்ந்த அவரது முகத்திரையில் மகிழ்ச்சி ரேகை பளிச்சிட்டது. எழுந்து சென்று 'சிரஞ்சை' எடுத்து ஏதோ ஒரு மருந்தை இழுத்து நிரப்பிக்கொண்டு, நோயாளியின் அருகில் வந்து மலர்ந்த முகத்தோடு, அவன் கையை நீட்டக் கூறி 'இஞ்செக்ஷனை'ப் போட்டுவிட்டு, **"இந்த மருந்து ஒரே வேளையில் குணம் தந்துவிடும்; இனி நீ கதறவேண்டாம்; துடிக்க வேண்டாம்; அலற வேண்டாம்; நோய் குணமாகிவிடும்! போ நாளைக்கு வந்து பார்!"** என்று சொல்லி, திரும்பினுர்.

நோயாளிக்கு ஒன்றுமே புரியவில்லை. நோய் குணமானுல் போதும்; எந்த மருந்தைக் கொடுத்தால்தான் என்ன? ஆயிரக் கணக்கில் செலவழித்து ஐந்தாறு வருடம் படித்துப் பட்டம் பெற்று வந்து தொழில் நடத்திக்கொண்டிருக்கும் டாக்டருக்கு, எந்த நோய்க்கு எந்த மருந்து கொடுப்பது என்பது தெரியாதா? என்ன!

இந்த நம்பிக்கையோடேயே நோயாளி, **நடந்து** வீடடைந்தான். அன்று இரவு வரையில், எந்தவித மாற்றமும் தெரியவில்லை. மாறுகப் புதிய புதிய 'வலிகள்' வந்து வாதைகொடுத்தன.

இன்றைக்குத்தானே மருந்து சாப்பிட்டிருக்கிறேம். நாளையும், இன்னும் இரண்டு மூன்று நாளும் சாப்பிட்டால் எல்லாம் சரியாகிவிடும்; டாக்டரே சொன்னுரே கதற வேண்டாம், துடிக்கவேண்டாம், குணமாகி விடும் என்று!

இந்த நம்பிக்கைக் கொடுத்த தெம்பில், வாதையை மறந்து நோயாளி கண்ணயர்ந்துபோனுன்.

பொழுதும் புலர்ந்தது. கண்விழித்த நோயாளியால் படுக்கையைவிட்டு எழமுடியவில்லை. நம்பிக்கையைப் பலமாகப்பற்றிக்கொண்டு தட்டுத் தள்ளாடி எழுந்து, ஊர்ந்து ஊர்ந்து மருத்துவமனையை அடைந்தான்!

வாய் நிறைந்த சிரிப்புடன், மலர்ந்து விரிந்த விழிகளில் வியப்புமேலிட வரவேற்ற டாக்டர், எப்படி இருக்கிறது? வயிற்றுவலி நின்றுவிட்டதா? குமட்டல் போய்விட்டதா?' என்றுர்.

நோயாளி என்ன சொல்வான்! பாவம்! பரிதாபமிக்க ஒரு பார்வையை வீசிவிட்டு, "நேத்தைவிட இன்னக்கி உடம்பு கொஞ்சம், வீங்கி இருக்கிறதா தெரியுதே சார்" என்றுன்.

"அப்படியா! கவலைப்படாதே! இன்னைக்கு **வேறெரு** இஞ்செக்ஷன்; **ரெண்டுடோஸ்மிக்சர்**. நாளைக்கு எல்லாம் சரியாய்ப்போயிடும்! பயப்படாதே! நோயைப் போக்கிக்கணும்னு கொஞ்சம் வாதையைப் பொறுத்துக்கத்தான் வேணும்! என்ன!"

உள்ளேபோய் 'சிரஞ்சில்' மருந்தை நிரப்பி ஊசியைப்போட்டுவிட்டு, புதிய மிக்சரையும் கலக்கிக் கொடுத்துவிட்டு, மெள்ள சிரித்தார்

நோயாளியும் சிரிக்க முயன்று, முடியாமல் தவித்து பின்னர் 'வரேன் சார்' என்று கூறிவிட்டுத் திரும்பித் **தள்ளாடி** நடக்கிறுன்.

**'நாளைக்கு வா'** மறந்துடாதே என்கிருர் டாக்டர். நோயாளி திரும்பிப்பார்க்காமல் தலையை மட்டும் ஆட்டிவிட்டு ஊர்ந்துபோய் வீடடைகிறுன்.

❋

மறுநாள். நோயாளியால் **நடக்கவே முடியவில்லை**. அடுத்த வீட்டுக்காரனின் உதவியுடன் ரிக்ஷா ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு டாக்டரைப் போய்ப் பார்க்கிறுன்.

டாக்டருக்குப் பெருமிதம்! **நடந்து**வந்த நோயாளி இன்று **ரிக்ஷாவில்** வருகிறுன்! எவ்வளவு **முன்னேற்றம்!** கலகலவென்று சிரித்துக்கொண்டே டாக்டர் நோயாளியிடம் வருகிறுர்.

ஸ்டெதாஸ்கோப்பினுல் அங்குமிங்கும் ஒற்றியெடுத்துவிட்டு, நாடியைத் தொட்டுப் பார்த்து,

நாக்கை நீட்டச் சொல்லிவிட்டு, கண் விழியைப் பிதுக்கிப் பார்த்து, '**இன்னைக்கு வேறொரு** இஞ்சக்ஷன்! மிக்சர் வேண்டாம்; **மாத்திரை** தர்ரேன்! சரியாப் போயிடும்! என்கிறார்.

நோயாளி இன்னமும் **நம்பிக்கையுடன்** டாக்டர் தந்த மருந்து மாத்திரையைப் பெற்றுக்கொண்டு மீண்டும் **ரிக்ஷா** ஏறி போய்ச் சேருகிறான்.

❋

மறுநாள், அதே ரிக்ஷாவில், கண் விழி பிதுங்கிய நிலையில் டாக்டரிடம் வருகிறான் நோயாளி.

இப்பொழுது டாக்டருக்குக் **கொஞ்சம்** பதட்டம்! "சரி சரி! இன்னைக்கும் **மருந்தை மாத்தித் தர்ரேன்.** இந்தா, இந்த 'கேப்சலைத் தொண்டையிலே போட்டு முழுங்கு" என்று ஒன்றைக் கொடுத்துவிட்டு **புதிய மருந்து** ஒன்றை இஞ்செக்ட் செய்துவிட்டு **சற்றே கவலையுடன்** வந்தமர்கிறார்.

❋

'கிர்' என்ற சப்தத்துடன் ஒரு **டாக்ஸி** வந்து டாக்டரின் வாசலில் நிற்கிறது. இடத்திலிருந்தபடியே தலையை மட்டும் நீட்டிப் பார்க்கிறார் டாக்டர்.

**பழைய நோயாளியை** நாலைந்து பேர் பிடித்துத் தூக்கிக் கொண்டுவந்து 'பெஞ்ச்' ஒன்றில் கிடத்துகிறார்கள்!

டாக்டர் பதறிப் போகிறார்! சோதித்துப் பார்த்துவிட்டு 'ஐயோ! இன்னும் **ஆறு** நாளில் **செத்துப் போவானே...!** தனக்குள் சொல்லிக்கொள்கிறார்!

'நகருங்க, நகருங்க'—என்று கூறிவிட்டு உடலை மீண்டும் நன்கு பரிசோதனை செய்கிறார். டாக்டருக்கே வியர்த்து விறுவிறுத்து விடுகிறது. '**ஆபரேஷன் செய்ய வேண்டும்!** யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிங்களா!' என்கிறார்.

வந்தவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்கிறார்கள். "ஆசாமி ஆறு நாளிலே அவுட் ஆயிடுவான்! ஆபரேஷன் செய்து பார்க்கிறேன். சம்மதம்தானே!"

வந்தவர்கள் பேசவில்லை. தலையை மட்டும் ஆட்டுகிறார்கள். நோயாளி ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்படுகிறான்.

❋

இரத்த விருத்திக்கு மருந்து கேட்டு, வயிற்று வலிக்கும், வாந்தி குமட்டலுக்கும் ஆளாகி, நடந்து வந்த நிலைகெட்டு, ரிக்ஷாவிலும் டாக்ஸியிலும் வந்து உயிருக்கு நாள் **கணக்கில்** 'கெடு' வைக்கப்பட்ட நிலையை நன்றாக ஒரு சித்திரமாக்கிக்கொள்ளுங்கள்.

சிந்தனைத் தெளிவோடு அந்தச் சித்திரத்தைப் பற்றிச் சிந்தித்தால் பெறப்படுவதென்ன?

சோர்வு சோம்பலையகற்றச் சரியான 'டானிக்' கொடுக்கப்படவில்லை. வயிற்றுவலி, நரம்புவலி வந்தபோதும், ஒழுங்கான கவனிப்பும் உரிய மருந்தும் செலுத்தப்படவில்லை.

உயிர் பிரியும் நிலைக்கு நோயாளி வந்துவிட்டான்! ஆபரேஷன் தேவைப்படுகிறது. ஆறுநாள் கெடு! ஆபரேஷன் வெற்றிதருமா?-அதுவும் ஒரு **நம்பிக்கைதான்!**

> இந்தியத் துணைக்கண்டத்தை '**ஆளத் தக்கவர்கள்**' நாங்களே; எங்களைத் தவிர **வேறு எவருக்கும் ஆளத் தெரியாது;** எங்களைத் தவிர, வேறு எவராலும் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்குத் **திட்டங்கள் தீட்டத் தெரியாது!** எங்கள் திட்டங்கள் நலிந்தோரை வளம்பெறச் செய்யும்! ஏழையரை உயர்த்தும்; 'இல்லாமை' என்ற இழிநிலையையே இல்லாதொழிக்கும்! பாரீர்! பாரீர்!! ஐந்தாண்டுத் திட்டங்களைப்பாரீர்! இரும்புத் தொழிற்சாலைகள் என்ன! நீர்த்தேக்கங்கள் என்னென்ன! தொழில்வளத் திட்டங்கள் எத்தனை எத்தனை? தொழிலாளர்நலத் திட்டங்கள் எவ்வளவு எவ்வளவு?

—என்றெல்லாம் கடந்த 19 ஆண்டுக்காலமாக வாய்ப்பறையடித்துவிட்டு, ஒவ்வொரு திட்டங்களின் இறுதியாண்டிலும், அதனதன் பலன்கள், விளைவுகள்பற்றியெல்லாம் கணித்தறியாது, அதிகாரிகள் தந்த வெறும் புள்ளிவிவரங்களை மட்டுமே நம்பிக் கெட்டுவிட்டு, ஓட்டை உடைசல்கள், தீய விளைவுகள், தீர்க்கப்பட வேண்டிய விவகாரங்கள் பற்றியெல்லாம் எதிர்க்கட்சிகளும், தொழிலறிஞர்களும், அரசியல் வல்லுநர்களும் பொருளாதார நிபுணர்களும் எடுத்துக் கூறியபோதெல்லாம் ஆணவப் பதிலை அள்ளித் தெளித்துவிட்டு, 'நாட்டின் நலத்தில் அக்கறையற்றவர்கள், முன்னேற்றத்தை விரும்பாதவர்கள் திட்டங்களைக் குறை கூறுகிறார்கள்! மக்களே நம்பாதீர்கள்! நாயகர்கள் நாங்கள்; எங்கள் மருந்துதான் உங்கள் உயிரைக்காக்கும்' என்றெல்லாம் கூறிக்கூறி மக்களை ஏமாளியாக்கி, ஏமாற்றித் தங்கள் வயிற்றையும், பெட்டியையும் நிரப்பிக்கொண்டவர்கள்—

> **'இன்னும் 6 மாதத்தில் திட்டங்கள் சீர்கெடும்; நாடு நலியும்-புரட்சிகரமாற்றம் இல்லாவிட்டால்**

என்று இன்று கூறுகிற நிலைமையில், புரட்சிகர மாற்றம் என்பதன்பேரால், ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பு என்ற ஆபரேஷனும் செய்யவேண்டிய கட்டத்தில் நாட்டைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள் என்கிறபோது—

> **இவர்கள் இந்த நாட்டை எந்த அடிப்படையில் ஆளும் பொறுப்பை ஏற்றார்கள்?**

என்ற ஐயம் சாதாரண குடிமகனுக்குக்கூடப் பிறப்பதில் நியாயமிருக்கத்தான் செய்யும்.

> 'நடந்தது நடந்துவிட்டது; அந்த டானிக் கொடுத்தேன்; இந்த இஞ்செக்ஷன் தந்தேன்; வேறு மாத்திரை கொடுத்துப் பார்த்தேன். 6 நாளில் மாண்டுபோவான்; ஆபரேஷன் செய்து பார்க்கிறேன்! என்கிற டாக்டருக்கும், இந்த ஆட்சியினருக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

நாணய மதிப்புக் குறைப்புபற்றி விரிந்த அளவுக்கு இங்கே விவரிக்காவிட்டாலும், அந்த நிலை ஏற்பட்ட காரணம்பற்றி பொதுமக்கள் நன்கு சிந்தித்தேயாக வேண்டும்.

அந்தசிந்தனையில்தான் டாக்டரும், **நோயாளியும்.** வந்து தீரவேண்டும்.

நாட்டு மக்கள் நோயாளிகள்! ஆட்சியினர் டாக்டராக இருக்கிறார்கள். **மாற்று மருந்து** என்பதன்பேரால் மரணப் படுக்கையில் கிடத்திவிட்ட டாக்டராக இருக்கிறார்கள் என்பதை மக்கள் உடனடியாகப் புரிந்துகொண்டாகவேண்டும்.

இந்த சித்திரத்தைப் புரிந்துகொண்டாலே போதும்: நோய் குணமாகிவிடும்!

# தம்பி

புன்னகை, பூங்காற்று, இன்னிசை, பொற்கொடி, மழலை, விழிமொழி என்பவை குறித்து எழுதிடின், படித்திட இனிமையாகத்தான் இருக்கும்; எழுதிடவும் எளிதுதான். ஆனால் அவை குறித்து நான் இன்று எழுதப்போவது இல்லை.

சோலையில் உலவுதல், அருவியில் நீராடல், கனிரசம் பருகிடல், நடனம் கண்டு மகிழ்ந்திடல், மண அறை அமர்ந்திடல், மங்கை நல்லாளின் 'முதல் இரவு' பெற்றிடல், பெற்றெடுத்த செல்வத்தின் உச்சி மோந்து களிபேருவகை அடைந்திடல் தான் பெற்ற முதல் ஊதியத்தைத் தாயிடம் கொடுத்து அவர்கள் தந்திடும் பெருமிதம் கலந்த கனிவினை நுகர்தல் என்பவை பற்றியும் எழுதிடலாம்; தித்திப்பு நிரம்பக் கிடைக்கும். ஆனால் அவை குறித்தும் எழுதிட இன்று மனம் இல்லை.

செய்தொழிலிலே பெற்றிடும் நேர்த்தியான வெற்றி, களத்திலே மாற்றான் மண்டியிடக் காணும்போது ஏற்படும் பெருமித உணர்ச்சி, உலா, முடிசூட்டு விழா போன்றவை குறித்து எழுதிடலாம்; மகிழ்ச்சியும் எழுச்சியும் நிரம்பிடத்தக்க விதமாக; ஆனால் அவை பற்றியும் இன்று எழுதிடப்போவதில்லை.

நான் இன்று எழுதுவது **கண்ணீர்**பற்றி! ஆமாம் தம்பி! ஆமாம்! **கண்ணீரைப்** பற்றியேதான்!


## கண்ணீர்!

நமக்கும் கண்ணீருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டே; அறிவாயே! பெரியார் நமக்கு இட்ட பெயரே, கண்ணீர்த்துளிகள் என்பதல்லவா! பெரியாரின் பொருந்தாத் திருமணம் பற்றி மனம் குமுறிய பல்லோர் தெரிவித்திருந்த கருத்துக்களை முதலில் **கண்டனக் கணைகள்** என்ற தலைப்பிட்டு நமது இதழில் வெளியிட்டனர்; எனக்கு அந்தத் தலைப்பு பிடிக்கவில்லை; ஆகவே, அந்தக் கருத்துக்களை **கண்ணீர்த்துளிகள்** என்றதலைப்பிட்டு வெளியிடச் செய்தேன். அதனையே நமக்குப் 'பெயர்' ஆக்கிவிட்டார், பெரியார்! அவர் எனக்காகவென்று வெகு அருமையாகப் பாடுபட்டுத் தேடிக்கொடுத்த செல்வம் என்றே நான் அந்த 'கண்ணீர்த் துளிகள்' என்ற பெயரை வரவேற்று மகிழ்ந்தேன்.

அது ஆண்டு பலவற்றுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது எதற்காக அண்ணா! அந்த நினைவு என்று கேட்கிறாயா? தம்பி! காரணமற்றும் தொடர்பற்றும், பொருத்தமற்றும் பொருளற்றும் எனக்குப் பழைய நினைவுகள் ததும்பிடுவதில்லை. இப்போதும் அப்படித்தான். ஒரு பெரிய தலைவர், நாட்டின் அதிபர், புரட்சி வீரர், புவியோர் மெச்சிடத்தக்க பேறு பெற்றவர், கண்ணீர் வடித்தார், என்று இதழ்களில் கண்டேன்; உடனே எனக்குக் கண்ணீர் பற்றிய பல்வேறு நினைவுகள் மனதிலே ததும்பிடலாயின!

தம்பி! கண்ணீரில் பலவகை உண்டு! நிகழ்ச்சிகளின் தன்மைக்கு ஏற்ப கண்ணீரின் வகை அமைகிறது.

வெற்றிக் களிப்பு, தியாக உணர்ச்சி, மகிழ்ச்சிப் பெருக்கு வேதனை, கோபம் எனும் பல்வேறு உணர்ச்சிகளின்போதும் கண்ணீர் வெளிப்படுகிறது. வகை பல



# கண்களில் கசிவு! காரணம் தெரியுமோ?

என்றேன். முறைகூடப் பலப்பல. அதனுல்தான், கசிந்தான், பொழிந்தான், கதறினுன், வடித்தான் என்று பலவிதமான பதங்களைக் கண்ணீருடன் இணைக்கிருேம்.

நான் குறிப்பிட்டேனே, நாட்டுத் தலைவரொருவரின் கண்ணீர்பற்றி, அவர் கண்ணீர் வடிக்கவில்லை; கண்களிலே நீர் கசிந்தது. மற்றவர்கள் கதறினுல், கண்ணீர் பொழிந்தால், வடித்தால் காண உருக்கம் எழும். ஆனுல் அவர் கண் கசிந்ததைக் காணவேண்டி ஏற்பட்டுவிட்டபோது ஒரு புன்னகை பிறந்திடும் நிலை; பலருக்கு; மிகப் பலருக்கு.

சிரித்திடப் பிறந்தவர் அவர்; அவர் கண் கசிகிறது.

பலருடைய கண்களிலே நீர்க்கொப்பளித்துக் குபுகுபுவெனக் கிளம்பிடும் நிலைமைகளை மூட்டினவர் அவர்; அவர் கண்களிலே நீர் கசிகிறது.

அவருடைய கண்ணீர் தனித்தன்மை வாய்ந்தது.

அந்தக் கண்கள் களைப்பு, திகைப்பு, ஏக்கம், கோபம், ஆகியவற்றினை வெளிப்படுத்தினதுண்டு. இப்போது அந்தக் கண்களிலே கசிவு!

கண்ணீர் சிந்திடு முன்பு அவருடைய கண்கள் அகம்பாவத்தைக் கக்கின! அடுத்துக் கண்ணீர் சிந்திட வேண்டி நேரிடும் என்று அவர் துளியும் எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. அவ்வளவு உன்னதமான இடம் அவருடையது! ஒரு நாடே அவருடைய காலடியில்! உலகமே அவர் சுட்டு விரல் அசைவு கண்டு. அதற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பு தடித்துப் போயிருந்த நிலை! அவருடைய கோபம் போதும் எவரையும் சுட்டெரிக்க! அவருடைய புன்னகை போதும் வாழ்க்கையைப் பூங்காவாக்கிட! அவர் சொல்லே சட்டம்! அவர் கண் கசிந்திடும் நிலை பெற்ருர் என்ருல், அது தனித்தன்மை வாய்ந்ததல்லவா?

பேரிடி, பேரிழப்பு, மூட்டப்பட்ட வேதனை ஆகியவைகளால் கிளம்பிடும் கண்ணீர் வேறு! இவர் சிந்திய கண்ணீர் வேறு. செய்த தவறுகளை எண்ணி, தன்னுல் துன்புறுத்தப்பட்டவர்களை எண்ணிச் சிந்திடும் கண்ணீர் வேறு, இவர் கண்களிலே கசிந்திட்ட கண்ணீர் வேறு. எடுத்த காரியத்தை முடித்திட முடியாது போகிறதே, போட்ட திட்டப்படி செயல், வடிவம் கொள்ளவில்லையே, எதிர்பார்த்துக் கணக்கிட்ட பலன் கைக்குக் கிட்டவில்லையே, என்பதாலே கண்ணீர் சிந்திடும் நிலைமைக்கும், இனி நமது விருப்பத்தின்படி காரியம் நடவாது போலிருக்கிறதே, இனி நமது கட்டுக்கு மற்றவர் அடங்கிடமாட்டார்கள் போலிருக்கிறதே, இனி நம்முடைய நிலை, தாழ்வாக்கிடப்படும் போல இருக்கிறதே, எப்படி நாம் அதனைத் தாங்கிக் கொள்வது, தாள் பணிந்துக் கிடந்ததுகளெல்லாம் தட்டிக் கேட்கத் துணிந்து விட்டனவே; அதுகளை மட்டந் தட்டத்தக்க வலிவு நமக்குக் குறைந்துபோய்விட்டிருக்கிறதே; அந்த வலிவு குறைந்துபோய்விட்டிருப்பது, அவர்களுக்கும் புரிந்துவிட்டிருக்கிறதே, இனி என்ன செய்வது என்று எண்ணியதால் கண்ணீர் கசியும் நிலை. அது தனி இயல்புடையது. அதனைக் காண்போர், அந்தக் கண்ணீரைத் துடைத்திடவோ, வந்துற்ற இன்னல் யாவும் நீங்கிப்போகும் என்று ஆறுதல் கூறிடவோ மாட்டார்கள். அப்படிப்பட்ட விதமான கண்ணீர் வடித்தார், **இந்தோனேஷிய நாட்டு அதிபர் டாக்டர் சுகர்ணே** சின்னுட்களுக்கு முன்பு என்ருேர் செய்தி கண்டேன் அதனுல்தான் தம்பி! கண்ணீர்ப் பற்றிய நினைவு எழுந்தது.

ஐநூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டதோர் அவை; அங்கு பேசுகிருர் டாக்டர் **சுகர்ணே**, கண்ணீர் கசிந்திடும் நிலையினில்.

அந்த அவையின் முன்பு அவர் பலமுறை இடி முழக்கமிட்டிருக்கிருர்; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி இருக்கிருர்; புத்திமதி கூறியிருக்கிருர்; சூளுரைத்திருக்கிருர்; கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிருர்; விளக்கம் அளித்திருக்கிருர்; பேருரை நிகழ்த்தியிருக்கிருர்; செயல்முறைபற்றிக் கூறியிருக்கிருர்; வெற்றிக் களிப்புடன் பேசியதுண்டு; வீராவேசம் காட்டியதுண்டு; அறைகூவலை எழுப்பியதுண்டு; கோபக் கனலை வீசியதுண்டு; ஒரு நாளும் கண்கலக்கத்துடன் பேசினதில்லை. அந்த நிலை பிறந்திடும் என்று அவர் கனவிலும் எண்ணினதில்லை.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போரிட அழைப்புவிடுத்தவர், எதனையும் இழந்திடலாம் உரிமையைப் பெற்றிட என்ற உறுதியை நாட்டவர் அனைவருக்கும் ஊட்டியவர், டாக்டர் சுகர்ணே; மறுப்பார் இல்லை; வரலாற்றுச் சுவடியிலே பதிக்கப்பட்டுவிட்ட நிகழ்ச்சி அந்த வீரக் காதை;


THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, சென்னை-1.



வீட்டிற்கோர்
நூல் நிலையம்
எங்கள் ஆங்கில
மொழிப் பாடங்கள்

ஆங்கிலம்
அறிவின் சுடர்-
அணையா
விளக்கு

வீட்டிலிருந்தபடியே...

குறைந்த செலவில்
அடிப்படையிலிருந்து
இலக்கண ரீதியாக

நிறைந்த
ஆங்கில மொழி
ஞானம் பெற

முழு விவரங்களுக்கு
உடனே 10-காசு
தபால் பில்லையுடன்
எழுதுக.

# பந்தமும் பாசமும் பயன் தராததேன்?

விடுதலைகிடைத்துவிட்டது என்ற வெற்றிச் செய்தியை நாட்டவருக்கு அறிவித்து அனைவரையும் அக மகிழ்ச்சிகொள்ளச் செய்தவர் டாக்டர் சுகர்னோ.

அன்னியரின் பிடியினை நீக்கிக்கொண்டோம்; இனி இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள செல்வத்தைத் திரட்டி நாட்டினைச் சீர்படுத்திடுவோம்; வெளிநாட்டார் விரும்பிப் பெற்றிடத்தக்க பொருள் நிரம்பிய களஞ்சியம் நம் நாடு; பொன்னும் மணியும் குவித்திடலாம், புவியோர் மெச்சிட வாழ்ந்திடலாம், புகழ்க் கொடியைப் பறந்திடச் செய்திடலாம் என்றெல்லாம் கூறினவர்.

டாக்டர் சுகர்னோ பேசினால் ஆயிரம் ஆயிரம் மக்கள் அப்படியே சொக்கிப்போவார்களாம். சொற்சிலம்பம் கண்டு வியந்திடுவார்களாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தம்பி! அவரை அந்நாட்டு மக்கள் கண் கண்ட கடவுளாகக்கொண்டனர். அவரினும் அறிவாற்றல்மிக்கவர் எவரும் இல்லை என்று நம்பிக்கிடந்தனர்.

நாட்டுப்பற்றுமிக்கவர் நமது தலைவர், தன்மானம் காத்திடுபவர் நமது தலைவர், நமக்கு நல்வாழ்வு அளித்திட வல்லவர் நம் தலைவர், நமக்கு எதுதேவை எது நல்லது என்பதனை முற்றிலும் உணர்ந்தவர் நமது தலைவர் என்று கொண்டாடினர்.

பிரச்சினை எதுவாயினும், சிக்கல் எதுவென்றாலும், அவர் அறிவார் என்னசெய்யவேண்டும் என்பதனை என்று அந்நாட்டுமக்கள் திடமாக நம்பினர்.

கப்பலோட்டியின் திறமையிலே மிகுந்த நம்பிக்கைகொண்டவர், சீறிடும் அலைகளைக் கண்டோ, பாய்ந்து வந்திடும் பெருமீன்களைக் கண்டோ கவலை கொள்வார்களா!

கட்டளையிடுங்கள் காவலரே! வழிகாட்டுங்கள் தலைவரே! அழைத்துச்செல்லுங்கள் அதிபரே—என்று துதிபாடினர் அந்நாட்டு மக்கள்.

அவரிடம் அளவிடமுடியாத மதிப்பும் நம்பிக்கையும், பற்றும் பாசமும் கொண்டதுடன், அவருடைய போக்கு நோக்கு, சொல். செயல் எனும் எதிலேயும் எந்தத் தலைவருக்கேனும் நிபுணருக்கேனும் ஐயப்பாடு ஏற்பட்டு, விளக்கம் கேட்டிடின், வாதம் செய்திடின், மறுத்துப்பேசிடின், என்ன துடுக்குத்தனம்! நமதுதலைவரிடமா குறைகாணுகிருன்!! அத்தனைப் பெரிய அறிவாளியோ இவன்!!—என்று பேசிட, சீறிப் பாய்ந்திடவும் அந்த நாட்டுமக்கள் முனைந்தனர்.

எதனையும் சிந்தித்துப் பார்த்திடும் உரிமையைத் தாமாகவே விட்டுவிட்டனர், அதற்கான தகுதியும் திறமையும் தமக்குக் கிடையாது என்ற எண்ணத்தில்.

நம்மிடம் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான், மக்கள் எல்லாப் பிரச்சினைகளையும் நம்மிடமே ஒப்படைத்துவிட்டனர். அவ்வளவு நல்ல இயல்பு கொண்டவர் நமது மக்கள் என்று துவக்கத்தில் 'அதிபர்' எண்ணிக்கொண்டார். பிறகோ!

> பாவம் ஏதுமறியாதவர்கள் இந்தமக்கள்

என்று எண்ணிடலானர். பிறகு,

> எதனையும் நானல்லவா சொல்லவேண்டி
> இருக்கிறது; செய்யவேண்டி இருக்கிறது

என்று பேசிடலானர். அதற்குப் பிறகு

> ஏ! மூடமே! இப்படிச் செய்!! இதைச்
> செய்!

என்று கட்டளையிடலானர். பிறகு,

> எதையாவது ஒழுங்காக, திறமையாகச்
> செய்திடத் தெரிகிறதா இதுகளுக்கு!

என்று கேலி பேசிடலானர்.

> இப்படிச் செய்யாவிட்டால், இன்னின்ன
> தண்டனை விதிக்கப்படும்

என்ற மிரட்டல் பேச்சும், அதைத் தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளலானர் அதிபர் சுகர்னோ.

> புதிய புதிய சட்டங்களைப் பிறப்
> பிப்பார்!
>
> மேலும் மேலும் வரிகளை விதிப்பார்!
>
> எண்ணிட, எழுதிட, கூடிட, பேசிட,
> தடைகள் போட்டிடுவார்!

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு • திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், சேவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

# ஆணவம் மிகுந்தது! அழிவு நேர்ந்தது!!

இவன் உன் பகைவன், இவனை ஒழித்துக்கட்டு என்பார்!

உரிமை கேட்காதே, உடைமையும் உயிரும் கூட உனக்கே உரியது என்று எண்ணிக் கொள்ளாதே! எல்லாம் நாட்டுக்காக! நாட்டுக்காக நான்! என் சொற்படி நடந்திட நீங்கள்! நான் இல்லையேல், இந்தநாடு இல்லை. இந்த நாடு இல்லையேல், நீங்கள் இல்லை!!

என்று உரத்தக் குரலில் பேசி, உருட்டு விழி காட்டலானார். நாட்டுமக்கள் சிறிதளவு கலங்கினர். ஆனால் அவரைப் பின்பற்ற, அவர் சொற்படி நடந்திடத் தவறவில்லை.

நமக்குப் புரியவில்லை, ஆனால் நமது தலைவர் எதனையும் நமது நன்மைக்காக, நாட்டு நலனுக்காகத்தான் செய்திடுவார்

என்று கூறி அமைதிபெற்றனர்.

தத்துவ விளக்கத்தில் அக்கறை கொண்டோர் மட்டும் அதிபர் மேற்கொள்ளும் போக்கு தவறானது, அதன் பயனாக நாடு சீர்கேடடையும் மக்கள் வேதனையில் தள்ளப்படுவர் என்று எச்சரித்துப் பார்த்தனர்.

எச்சரித்தவர்கள் தூக்கி எறியப்பட்டனர்.

முழங்குக முத்தமிழ்! தோற்றம்: 196

## பைந்தமிழ்க் கல்லூரி

நேருஜி நகர், திருச்சி ரோடு.
திண்டுக்கல், (மதுரை மாவட்டம்)

**மாணவ, மாணவிகளுக்கு அரிய வாய்ப்பு!**
**மாணவர் சேர்க்கை Admissions நடைபெறுகின்றன!**

S. S. L. C. தவறியவர்களும், படித்தவர்களும், அதற்குக் கீழான படிப்புள்ளவர்களும், பயிற்சிப் பள்ளிகளில் இடம் இல்லையே என்று வருந்துகின்றவர்களும் இங்கு படித்துப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுத் தமிழாசிரியர்களாகி B. A. B. T. மாத வருமானம் (துவக்கமே ரூ. 205க்கு மேல் அடையலாம். மாணவ, மாணவியர் தங்கிப் பயிலத் தனித்தனியே பாதுகாப்புள்ள குருகுலங்கள் (Hostels) உண்டு. நேரில் வந்து சேர்ந்துகொள்ளலாம்.

தனிப்படத் (Private) தேர்வு எழுதும் ஆசிரிய, ஆசிரியைகட்குப் புத்தகங்களே வாங்காத நிலையில் தெளிவாகப் பாடக் குறிப்புகள் அஞ்சல் வழி அனுப்பப்படும்.

ரூ. 5-00 M.O.வுடன் விண்ணப்பிக்க. M.O. இன்றி வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

முதல்வர்: (Principal)
வித்துவான், இரா. இளையநம்பி
துணை முதல்வர்: (Vice Principal)
பண்டிதை, நாகலக்குமி அம்மையார்
மேலாளர் & காவலர் (Manager & Wardan)
திருவாட்டி, R. பாக்கியம்

மக்கள் அதிபருக்குத் துணை நின்றனர். மெள்ள மெள்ள கட்டங்கள் புதிது புதிதாக வளர்ந்தன. இறுதியில் அதிபர்-கை கட்டி வாய் பொத்தி நின்றிடும் ஏவலர்-அடிமைத்தனத்தைத் தாமாகவே மூட்டி விட்டுக் கொண்ட மக்கள்—என்ற நிலைபிறந்தது.

உரிமையின் அருமையும் சிந்தனைச் செல்வத்தின் பெருமையும் கிடக்கட்டும், அவர் நடாத்திடும் ஆட்சியில், நாம் நல்வாழ்வு பெற்றிருக்கிறோம்; அது போதும். ஏடு தூக்கிடுவோர், எதற்கும் வாதாடிடும் இயல்பினர், எதனையாவது கதைத்துக் கொண்டு கிடக்கட்டும், நாம் புது வாழ்வு, முழுவாழ்வு பெற்றிருக்கிறோம், நமக்கு அது போதும் என்று இந்தோனேஷிய மக்கள் எண்ணி நிம்மதி பெற்றிட முடியவில்லை.

நாடு சீர் கேடடைந்தது.

வளம் பாழாக்கப்பட்டது.

தொழில்கள் நசித்திடலாயின.

வீண் பகை வளர்ந்தது.

பொருளாதாரச் சீர் குலைவு ஏற்பட்டது!

நாணயத்தின் மதிப்பு தேய்ந்தது.

பண்டங்களின் விலைகள் விஷம்போல் ஏறின.

வாழ முடியாதாரின் தொகை பெருகிற்று

பெருமூச்சுக் கிளம்பிப் பெரும் புயலாகி விட்டது!

நம்பிக்கை முறிந்தது, கண்கள் சிவந்தன!

வழி திறந்தது! கேள்விகள் கிளம்பின

எதிர்ப்பு வலுத்தது, எங்கும் பரவிற்று!

அதிபரின் அக்ரமப் போக்கு கண்டிக்கப்பட்டது!

மக்கள் பொங்கி எழுந்தனர் புது வேகத்துடன்!

புரட்சி வெடித்துக் கிளம்பிற்று.

போதும் உமது அலங்கோல ஆட்சி என்றனர் மக்கள்!

இனிப் பொறுத்திட முடியாது, பட்டதெல்லாம் போதும் என்று குமுறினர் மக்கள்.

அடக்கு முறையை அவிழ்த்து விட்டார் அதிபர்! அதன் பசி தீருமளவு 'பலி' கிடைத்தது; ஆனால் புரட்சி மங்கிட மறுத்தது.

உடனிருந்தோர்களை உருக்குலையச் செய்திட்டார் அதிபர்! அவர்க்குப் பரிவு காட்டிட முனைந்தனர் மக்கள்!

சூறைக்காற்று கிளம்பிற்று; தோனி ஓட்டம் தடுமாறிடலாயிற்று.

# இதயத்திலிருந்தேன்! எனக்கோ இழிவு?

துரத்தப்பட்டுப் போய்விடுவோமோ என்ற கிலி பிடித்துக்கொண்டது அதிபரை! ஆண்டது போதும்! மக்கள் மாண்டது போதும்; வளம் வரண்டது போதும்! இனி நாட்டு வாழ்வுக்கான வழிகண்டிடத் துணிவு கொண்டோம் என்றனர் மக்கள்!

என்னையா எதிர்க்கத் துணிந்தீர்கள்! என் வீரதீரம் அறியீரா! என்று ஆர்ப்பரித்தார் அதிபர்!

மக்களின் மகத்தான சக்தியின் முன்பு எந்த மன்னனும் எம்மாத்திரம் என்று கேட்டனர் மக்கள்.

இளைஞர் அணி திரண்டது! மாணவர் படை முனைந்து செயலில் ஈடுபடலாயிற்று!

அதிபர் சுகர்ணோ தமது பிடிதளர்ந்துவிட்டதனை உணர்ந்தார்; கொதித்தார்; மிரட்டினார்; கடைசியில்? **அழுதார்!** அவையைக் கூட்டி வைத்துக்கண்ணீர் கசிந்திடும்நிலையினராகி, நாட்டு விடுதலைக்காக நான் பட்ட இன்னலும் இழப்பும் கொஞ்சமா?

என்னை இதயத்தில் வைத்திருந்தீரே! என்னையா இப்போது எதிர்க்கின்றீர் என்று கேட்டார்!

பேச்சுடன் நிற்கவில்லை! கண்கசிந்தது!! மக்களின் மனம் இளகவில்லை. ஏன்? டாக்டர் சுகர்ணோவின் போக்கு அந்தநெஞ்சங்களைக் கல்லாக்கிவிட்டது.

துவக்கத்தில், மக்கள் துயரம் கொட்டிடுகிறதே, அதிபரே! என்று முறையிட்ட நேரத்தில், அதிபர்

ஒரு தலை அசைவு, ஒரு இலேசான புன்னகை, ஒரு நல்ல வார்த்தை துளியேனும் மதிப்பு

காட்டியிருந்திருந்தால், மக்கள் தமது இன்னலைக்கூட மறந்துவிட்டிருப்பர். அதிபர் சுகர்ணோவோ, கனலைக் கக்கினார், அது மக்களின் நெஞ்சிலே ததும்பிக்கொண்டிருந்த பற்று பாசத்தை அடியோடு பொசுக்கிக் கருக்கிப் போட்டுவிட்டது! மக்களின் மனம் வெதும்பிப் போய்விட்டது; அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர்; இல்லை, இல்லை, துரத்தப்பட்டு விட்டனர்.

அதற்குப் பிறகு அவர்களின் மனம் இளகுமா? பரிவு காட்டும் முறையில் அவர் பேசினாலும், அதனைப் பாசாங்கு என்றே மக்கள் கொண்டிடலாயினர்.

நாட்டுக்காக நாளும் உழைத்தேனே என்று அவர் கூறும்போது, அறிவோமே! நாட்டைக் காடாக்கியதை! மக்களை மாக்களாக்கியதை! செல்வத்தை நாசமாக்கியதை! என்று மக்கள் முணுமுணுத்திடலாயினர். அது மெள்ள மெள்ள வேகமடைந்து அதிபரின் நிலையைக் குலைத்திடும் எதிர்ப்பாகிவிட்டது! சீறிடும் மக்களை அடக்கிடும் திறனற்றுப்போன நிலையில், அதிபர் சுகர்ணோ **'அழுது கொண்டே'** பேசினாராம்!

ஆனால் அவருடைய கண்ணீர் காலங்கடந்து வெளிப்பட்டது; ஆகவே பலன் கிடைக்கவில்லை—அது மட்டுமல்ல, ஆணவத்துடன் அரசு நடாத்தியதால் அவதி பல கண்டோர் கண்ணீர் வடித்தபோது, காவலன் கேலிப் புன்னகையோ, அலட்சியமோ காட்டினான்; இரக்கம் காட்டினானில்லை; கண்ணீருக்கு மதிப்பளித்திட்டானில்லை. அத்தகைய போக்கினன், பிடி இழந்து நடை தளர்ந்து தடுமாறித் தத்தளித்துக் கண்ணீர் உகுத்திடின், எவர் இரக்கம் காட்டுவர்!

தம்பி! டாக்டர் சுகர்ணோவின் கண்ணீர், இரக்க உணர்ச்சியைத் தூண்டிடவில்லை எனினும், ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாரனைவருக்கும், பாடம் புகட்டத்தக்கது!

**ஆர்ப்பரித்துக் கிடப்பவன் ஓர்நாள் அழுது தீரவேண்டும்.**

**மக்களைக் கசக்கிப் பிழிபவன் ஓர்நாள் கண்கலங்கி நிற்கவேண்டும்.**

**கனல் கக்கிக் கிடப்பவன் ஓர்நாள் கண்ணீர் சிந்திட வேண்டி வந்திடும்.**

இந்தப் பாடங்களைத் தருவதாக உளது டாக்டர் சுகர்ணோ சிந்திய கண்ணீர். வீரத்தில் தீரத்தில், அறிவாற்றலில், தியாகத்தில் டாக்டர் சுகர்ணோ முதல் வரிசையில் வைத்துப் போற்றிடத்தக்க நிலையினர்; ஐயமில்லை. ஆனால் மக்களாட்சியின் மாண்பினை மாய்த்து, மமதை கொண்டு, கொடுமை புரிந்திடின் 'அன்றொரு நாள்' ஆற்றிய அரும்பணி எழுப்பிடும் பற்றும் பாசமும், மக்களைக் கடைசிவரையில் செயலற்றவர்களாக்கிவிடாது.

நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்; உண்மை; அதனால் நம்மை நசுக்கி, உரிமைகளை உருக்குலையச் செய்து, நாட்டைப் பாழ்படுத்துவதா!

விடுதலை வாங்கித் தந்தார்! ஆம்! ஆனால் எதற்கு? நாம் ஆமைகளாய், ஊமைகளாய்

## வேலைக்குரிய விரல்கள்!

ஐந்து விரல்களும் ஒன்றைப்போல் இல்லை; எல்லாக் காரியங்களுக்குமே ஐந்து விரல்களும் பயன்படுத்தப்படுவதுமில்லை, எந்தெந்தக் காரியங்களுக்கு எந்தெந்த விரல்கள் இணையவேண்டுமோ, அந்தந்த விரல்கள் இணைந்து செயல்படுகின்றன; எழுதவேண்டுமானால். கட்டைவிரலும் அதற்கு அடுத்த சுட்டுவிரலும் இணைந்தால் போதும். மற்றவை ஓய்வெடுத்துக்கொள்ளும், கன்னத்தில் அறைய வேண்டுமானால் ஐந்து விரல்களும் இயங்கித் தீரவேண்டும்,

எந்தெந்த வேலைக்கு, எந்தெந்த விரல்களை இணைப்பது என்பதை தி. மு. கழகம் நன்கு அறிந்திருக்கிறது. அதனால் எதிர்க்கட்சிகளை இணைத்து தொகுதி உடன்பாடு காண அது முயல்கிறது.

அண்ணா (திருச்சி மாநாட்டில்)

கிடந்திடவா? கொடுங்கோலாட்சி நடத்திடவா? நியாயமா?

புலியிடமிருந்து மீட்டிட்டார், உண்மை; நன்றி கூறிடக் கடமைப்பட்டுள்ளோம்; ஆனால் எதற்காகப் புலியிடமிருந்து நம்மை மீட்டிடுவது? பெருநெருப்பிலே தள்ளிடவா? பெருநெருப்பிலே நின்றிடும்போது, நம்மைப் புலியிடமிருந்து காப்பாற்றிய புனிதன் இவன், ஆகவே இப்போது நம்மைத்தழலிலே தள்ளிடினும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று எவர் கூறுவர்! ஏமாளியும் கூறிடானே!!

என்று பலமுறை, ஆத்திரத்தில் அங்காடியில், சாலையில் சோலையில், விடுதிகளில் குடில்களில் பேசிப் பேசிக் குமுறினோர் பல்லோர். அவர்களின் கண்ணீர் முதலிலே சிந்தப்பட்டது; இறுதியில் ஆணவ அரசு நடாத்தியோன் கண்ணீர் வடிக்கிறான்! இட்டார்க்கு இட்ட பலன்! விதைத்தது தினை அல்ல; கிடைப்பது தினையாக இருக்க முடியாதல்லவா!

இந்தோனேஷிய அதிபர் கண்கசியும் நிலையினில் பேசினார் என்ற செய்திபைப் படித்ததும் தம்பி! இந்த நினைவுகள் வந்தன! பிறிதோர் செய்தி கண்டேன், சிரிப்பே வந்தது.

பகை கக்கி, போர் மூட்டிவிட்டு, வரம்பு மீறிய வகையில் 'நாய்' என்றே ஏசிப்பேசி, இறுமாந்துகிடந்த பாகிஸ்தானத்து **புட்டோ**, பதவி இழந்து, விரட்டப்பட்டு வீடு திரும்புங்காலையில், அவருடைய போக்கிரித் தனத்தை வீரம் என்று எண்ணிடும் போக்கினர், அவருக்கு வரவேற்பு நடத்தி, மலர் தூவிப் பாராட்டினராம், லாகூர் ரயிலடியில், அப்போது புட்டோ **விக்கிவிக்கி அழுதாராம்!**

இறுமாப்பு இவ்வளவு விரைவிலே நொறுக்கப்பட்டுப் போகும் என்றோ, ஆணவம் கக்கிய கண்கள் இவ்வளவு குறுகிய காலத்தில், கண்ணீர் வடித்திடும் என்றோ, எவரும் எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. அயூப்கானையே ஆட்டிப் படைப்பவர் இந்த புட்டோ என்று புகழ்பாடினர்! விக்கிவிக்கி அழுதாராம் வீரா வேசமாடிய புட்டோ! என்ன எண்ணிக்கொண்டு அழுதாரோ, என்ன நோக்கத்துடன் அழுதாரோ!

பாவம்! இப்படி அழுகிறாரே! இவருக்குப் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இத்தனைக் கொடுமை இழைத்துவிட்டாரே!

என்று பார்ப்பவர் எண்ணிக்கொண்டு, தன் பக்கம் திரண்டு நின்று, அயூப்கானை எதிர்த்திடத் தூண்டுவர் என்ற நினைப்பாக இருக்கலாம். அல்லது பாகிஸ்தானத்து அதிபரின் பக்கம் அமர்ந்து இருந்த துணிவிலே என்னென்னமோ பேசித் திரிந்தோம்; இனி? என்று எண்ணியபோது கண்ணீர் புரண்டோடி வந்ததோ? தெரியவில்லை.

ஆனால் ஆணவம் நிலைக்கவில்லை! அழ வேண்டிய நிலை பிறந்தது.


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

**ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்**

**சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.**

**(Recognised by Central Board of Indigenous Madicine Madras)**



பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A கன்னம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

# சிந்திடும் கண்ணீர் செருக்கை மாய்த்திடும்!

இவராகிலும் பரவாயில்லை, விக்கிவிக்கி அழுதார், வேறு இன்னல் எதுவும் தாக்கிடவில்லை; இன்னமும். **'நானே எல்லாம்'** என்று இறுமாந்துகிடந்த **கனு** நாட்டு அதிபர் நிக்ருமா, தம்பி! எந்த நிலையில் உள்ளார், தெரியுமா? ஆட்சி அவரிடம் இருந்தபோது நாடுகள் பற்பல போட்டியிட்டுக்கொண்டு அவருக்கு வரவேற்பு கொடுத்திட, விழா நடாத்திடத் துடித்தன.

> இப்போது அறுபது நாடுகளின் போலீஸ் இலாகா, அவரைப் பிடித்துக் கைது செய்து, கூண்டிலே நிறுத்திட, துடித்தபடி உள்ளன.

அழத்தான் செய்வார், பாவம்! அன்று இருந்ததை எண்ணிக்கொண்டு!! ஆனால் அவர் சிந்திடும் கண்ணீரைக் கண்டு இரக்கம் காட்டிட **கனு** மக்கள் ஒப்புவரா!

> அழுகிறாரா? அழட்டும்! அழட்டும்! எங்களை ஆண்டு பல அழவைத்தவர் அழட்டுமே சிறிது!! நாங்கள் அழுது அழுது ஓய்ந்து போனோம்! கண்கள் வரண்டு போய்விட்டன! இப்போது, எம்மை அழவைத்தவர் அழட்டுமே! கண்ணீர் வடியட்டுமே!!

என்றுதானே பேசுவர் கனு நாட்டில் காட்டாட்சி நடத்தியவர் கண்ணீர் சிந்திடும்போது!

உயர்ந்த இடம் அமர்ந்துவிட்டோம், இனி நம்மை எவரும் நெருங்க முடியாது!

> மக்களைத் துதிபாடகர்களாக்கிவிட்டோம், இனி நம்மை அசைக்கவும் எவராலும் முடியாது.

என்று இறுமாந்து கிடந்ததால் கனுநாட்டு அதிபர், ஜனநாயக அமைப்பையே நொறுக்கித்தள்ளினார். இப்போது? அவர் கிடைக்கவில்லை! ஆகவே அவருடைய சிலையை உடைத்துத் தூள்தூளாக்கினர், கொதித்தெழுந்த மக்கள்!

ஏ! அப்பா! சாமான்யமானவர்கள் அல்ல இந்த மக்கள்!

**மண் பொம்மைகள்**
**மரக்கட்டைகள்**
**தலையாட்டிகள்**
**தாள்பணிவோர்**
**அச்சத்தால் பீடிக்கப்பட்டோர்!**
**ஐயோபாவங்கள்!**
**கையில் ஊமையர்!**

என்று ஆணவ அரசு நடாத்துவோர்களை நம்பவைத்து விடுகிறார்கள்; நெடுங்காலம்! ஆனால் ஓர் நாள், எங்கிருந்தோ, எப்படியோ அவர்களுக்கு எதையும் செய்திடலாம் என்ற துணிவு பிறக்கிறது; புயல் எழுகிறது! அப்போது,

> அரண்மனைகள் இடிக்கப்படுகின்றன!
> ஆணவ அரசுகள் கவிழ்க்கப்படுகின்றன.
> மணிமுடிகளைப் பந்தாடுகின்றனர்!
> மமதையாளர்களை விரண்டோடச் செய்கின்றனர்
> சிலைகள் தூள்தூளாகின்றன!
> அந்த நாளை எண்ணி அரசு இழந்தவர், அழுகின்றனர்.

தெளிவாகத் தெரிகிறது, மக்கள் மீது மமதையாளர் இறுதிவரையில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பது. என்றாலும், மக்களை அழவைத்து மமதையாளர் சிலகாலமோ நெடுங்காலமோ சிரித்துக்கிடக்கின்றனர். பிறகோர் நாள்!

> செருக்குடன் சிரித்தவன் கண்ணீர்சிந்துகிறான்; அந்தக் கண்ணீரைக் கண்டு, இரக்கம் காட்டிட மக்கள் மறுக்கிறார்கள்!!

உரிமை பறிக்கப்படும்போது உள்ளம் குமுறி அழுகிறான் குடிமகன், உடைமை பறிக்கப்படும்போது கதறுகிறான் ஏழை! கொடுமை தாக்கும்போது கூவி அழுகிறான் சாமான்யன்! கொளுத்தப்பட்ட குடிசைகள், இடித்தெறியப்பட்ட நம்பிக்கைகள், ஏழையைக் கதறிடச் செய்கின்றன. மகனைச் சவுக்காலடித்ததைக் கண்டதாய், சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்ட அன்னை, தலையில் அடித்துக்கொண்டு அழுகிறாள்! கற்பழிக்கப்பட்டாள் கன்னி என்பதனை அறிந்து ஆண் மகன் இரத்தக் கண்ணீர் வடிக்கிறான்; கொடியவன் கிடைத்திடின் வாள் வேண்டாம், இக்கரம் போதும் அவனைக் கொன்றிட என்று அழுதபடி கூறுகிறான்.

அப்போதெல்லாம், ஏழை எட்டமுடியாத உயரம் இருக்கிறோம், நம்மை எவன் என்ன செய்ய முடியும் என்ற இறுமாப்புடன், சிரிக்கிறான், செருக்குமிக்கோன்! பிறகோர் நாள்? கண்ணீர் வடிக்கிறான்!

பன்னெடு நாட்கள் கண்ணீர் வடித்துக்கிடந்த ஏழை காண்கிறான்.

நான் இளகிய மனதுடன்தான் இருந்தேன், உன் கொடுமை என் மனதைப் பாறையாக்கிவிட்டது!

நான் அடிபணிந்துதான் கிடந்தேன், அன்புக்குக் கட்டுப்பட்டு, உன் ஆணவம் என்னை எழுப்பிவிட்டு விட்டது.

நான் உன்னை ஆட்சி நடத்தச் சொன்னேன். நீயோ என்னைக் காலின் கீழ்போட்டு மிதித்தாய்! நான் விடுபட முனைந்தேன், பொடிப் பொடியாயிற்று உன் ஆதிக்கம், கண்ணீர் வடிக்கிறாய்! இப்போது!!

அந்தக் கண்ணீர் இனி உன்னைக் காப்பாற்றாது. ஆனால் மற்றவர்கள்—அரசாளும் நிலை பெறுபவர்கள்—பாடம் பெற உதவட்டும்! ஆகவே அழு! அழு! ஆணவம் அழிந்தது என்று அழு! மக்களின் சகதியே முதல்! முடிவு! என்று அழு! மனிதனுக்கு!!—என்று கூறுவான்—சொல்லால் அல்ல; தன் பார்வையால்.

தம்பி! இந்த எண்ணங்களெல்லாம் வந்ததுடன், இன்று ஆணவ அரசு நடாத்திடுவோர் இதனைக் கண்டேனும் பாடம் பெறுவார்களா என்ற கேள்வி எழுந்தது!

அந்தக் கேள்விக்கான விடையை நான் எங்கு எதிர்பார்ப்பேன்? உன்னிடந்தானே! ஆகவேதான் உள்ளத்தில் தோன்றினவற்றை உன்னிடம் உரைத்தேன்!

அண்ணன்,

அண்ணாதுரை

# உலக அரங்கில்

## மாஸ்கோ நோக்கி....

இந்தியா-பாகிஸ்தான் உறவினை யொட்டிதான் பாகிஸ்தான்-இரஷ்யா உறவுமுறைகள் அமையும் என இங்குள்ள பலர் தப்புக்கணக்குப் போட்டு வருகின்றனர். அமெரிக்கா-பாகிஸ்தான் உறவு முறைகளில் உள்ள ஏற்றம் — இறக்கம் ஆகிய இரண்டினை யொட்டிதான் இரஷ்யா—பாகிஸ்தான் உறவுகள் விரியவோ சுருங்கவோ செய்யும். இராஜதந்திரம் எப்போதுமே நஷ்டத்தில் செலவழிய யாரும் அனுமதிக்க மாட்டார்கள்.

இந்தியப் பிரதமர் இந்திரா அமெரிக்காவிலிருந்து திரும்பியபோதுதான் மாஸ்கோ விமான நிலையத்தில் இரஷ்யப் பிரதமரைச் சந்தித்தார். இன்னும் சில நாட்களில் திட்ட அமைச்சர் மேத்தா, உணவு அமைச்சர் சுப்பிரமணியம், காங்கிரசுத் தலைவர் காமராசர் இப்படி இரஷ்யா நோக்கிப் பயணம் செய்வோர் பட்டியல் தயாராக இருக்கும் நிலையில இரஷ்யத் தலைவர் கோசிஜின்னும் இன்னும் சில திங்களில் இங்குவர இருக்கிறார் என்ற திட்டம் வேறு இருக்கும்போது பிரதமர் இந்திராவும் அடுத்த திங்கள் மாஸ்கோ போகிறார் என்ற செய்தி, பல கலை பரிமாணங்களில் நோக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

காங்கிரஸ் நேருவின் பாதையிலிருந்து மட்டுமல்ல; சோஷலிசப் பாதையிலிருந்தே என்றோ மாறிவிட்டது என இந்தியாவில உள்ள இரஷ்யச் சார்பு கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல; காங்கிரசிலுள்ள பெருந் தலைவர்களேகூடப் பேசிவருகின்றனர் என்பதை இரஷ்யா காது கொடுத்துக் கேட்டுவருவது மட்டுமல்ல; "ஆமாம் அப்படித்தான் போலிருக்கிறது'' என சந்தேகத்துடன் தலையசைத்து "ஏன் இப்படியெல்லாம்?'' என வலிந்து தலையிட்டுக்கண்டிக்கவும் செய்தது, அதிகார பூர்வமான ஏடுகளில் எழுதிய கட்டுரைகளின் மூலம்.

நாணய மதிப்புக் குறைவு அமெரிக்காவின் வற்புறுத்தலின் விளைவாக என்ற ஒரு பரவலான சந்தேகத்துக்கு ஆட்சியிலிருப்பவர்கள் நம்பத்தகுந்த மறுப்பை வெளியிடாததை மட்டுமல்ல; குற்றச்சாட்டு சரிதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நாணய மதிப்புக் குறைப்பை அடுத்து "அமெரிக்க உதவி இந்தியாவில் வெள்ளம் போல் ஓட ஆரம்பிக்கிறது'' என்ற செய்தியை இரஷ்யா கடைக் கண்களால் நோக்கியும் வருகிறது.

இதையெல்லாம் "சரிக்கட்ட''த் தான் இந்திராவின் பயணம் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இது ஒரு பக்கத்தின் படப்பிடிப்பு; மறுபக்கத்தில் இருப்பது என்ன தெரியுமா?

சில நாட்களுக்குமுன்னர் பாகிஸ்தானத்து 'டான்' பத்திரிகை இரஷ்யாவிலிருந்து இராவல்பிண்டிக்கு ஆயுதங்கள் உதவியாக வந்திறங்கப் போகிறது என்று ஒரு செய்தியை பூரிப்புடன் வெளியிட்டது.

அது இந்திய அரசியல் வட்டாரத்தில் அதிர்ச்சி கலந்த கண்சிமிட்டலைத் தோற்றுவித்தது. காஷ்மீர் முதல் எல்லா பிரச்சனைகளிலும் ரஷ்யா நம் பக்கம்தான் என கண்ணை மூடிக்கொண்டு நம்பி வந்தது மட்டுமல்லாமல் அந்த அடிப்படையில சிறிது தைரியத்தையும் பெற்றிருந்ததற்குச் சோதனை வந்துவிட்டது என மனங்கலங்கினர்.

எந்த ஒரு பிரச்சனையையும் பிறர் நிலையிலும் இருந்து பார்க்காததன் விளைவு இது.

இந்தியாவின் நட்பு இருந்தால் போதும்; எந்த நாட்டின் உறவும் நமக்குத் தேவையில்லை என்ற அனுபவகுறைவு இரஷ்யாவுக்கு இருக்குமென அரசியல் அனுபவமே இல்லாதவர்கள்கூட கூறமாட்டார்கள்.

உப்பிட்ட வீட்டுக்குத் துரோகம் நினைக்கிறது; இராணுவக் கூட்டுகளின் ஒற்றுமையைக் கேள்விக் குறியாக்குகிறது; இந்த உலகில் எந்த நாட்டை 'வழிக்குக்கொண்டு வர'வேண்டுமென நினைக்கிறோமோ அந்த நாட்டுடன் தோள்மேல் கை போட்டு நெருக்கம் கொள்கிறது என்பனபோன்ற பல பொல்லாத செயல்களுக்காகப்பாகிஸ்தானுடன் அமெரிக்கா ஏன் உறவு முறைகளைத் துண்டித்துக்கொள்ளவில்லை என உண்மைப் பின்னணி புரிந்தவரும் கேட்கமாட்டார்கள்.

இரஷ்யாவாகட்டும் அமெரிக்காவாகட்டும், பாகிஸ்தானைப் பகைத்து ஒதுக்கவோ வெறுத்துத் தள்ளவோ தயாராயில்லை. **சீனாவின் பிணைப்பிலிருந்து அதை அகற்றவேண்டுமென்பதற்காக இரு பெரும நாடுகளுமே தனித்தனியே கொள்கைகளை வகுத்துக்கொண்டு இயங்கி வருகின்றன.**

—இந்த இயக்கத்துக்குத் தடையாக வரும் எந்த ஒரு புதிய அல்லது பழைய பிரச்சனைகளெல்லாம் இரு நாடுகளுக்குமே இரண்டாந்தர மூன்றாந்தர முக்கியத்துவம் வாய்ந்ததுதான்.

தாஷ்கண்ட் உடன்படிக்கை உணர்விலும் செயலிலும் சரிவர கடைப்பிடிக்கப்படவில்லை என்று பாகிஸ்தானை மட்டும் கோபித்துக் கொள்ளாமல் இந்தியாவையும் சேர்த்து ஒரே தட்டில் எடைபோடுவதும் அயூப் அண்மையில் மாஸ்கோ சென்று வந்ததும், இரஷ்யாவிலிருந்து உயர்மட்டத்துக்குத் தலைவர் ஒருவரது தலைமையின் கீழ் நல்லெண்ணத் தூதுக்குழு பாகிஸ்தான் சென்று திரும்பியதும் இரஷ்யாவிலிருந்து எங்களுக்கு ஆயுத உதவி வரப்போகிறது என 'டான்' ஏடு பெருமைபட்டுக் கொள்வதும்—

—இரஷ்யா — பாகிஸ்தான் உறவு முறைகளில் ஒரு நெருக்கம் தோன்றி வருவதைக் காட்டுகிறது என்பதை

—எது எப்படிப் போனாலும் யார் என்ன ஆனாலும் காஷ்மீர்ப் பிரச்சனையில் மாஸ்கோ நம்பக்கம் தான் மற்றது எப்படியாவது ஆகட்டும்—

என்ற போக்கில் இருக்கும் நமது அரசினர் உணரவேண்டும்.

பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி என்ற டான் இதழின் நம்பத் தகுந்த வதந்தியை முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் மறுத்த சோவியத் அரசியல் வட்டாரம் மறைமுகமாக

—அமெரிக்காவின் வற்புறுத்தலுக்காகப் பணிந்து இவர்கள் மட்டும் பாகிஸ்தானுடன் சண்டை சச்சரவுகளை முடித்துக் கொள்ளலாமா என யோசிக்கும்போது எங்களுக்கும் அதுபோல காலத்துக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கவாறு உறவுகளை மாற்றியமைத்துக்கொள்ளும் உரிமை இல்லையா? என்று கேட்டதாம்!

மாஸ்கோ போகும் அம்மையார் இந்தப் புதிய பின்னணிகளையெல்லாம் உணர்ந்தே செல்வார் என எதிர்பார்க்கிறோம்.

—எஸ். ஆர்.




மலையடிவாரத்தில் எடுத்த அந்த ஓலையைப் படித்து முடித்ததும், நெற்றியைத்தடவிக் கொண்டே சுவடியடிகள், குலசேகரனைப் பார்த்தார்.

"இப்பொழுது இதற்கு என்ன செய்வது?" என்று கேட்டான் குலசேகரன்.

"இந்த ஓலை மிகவும் நெருக்கடியான நிலைமையை உண்டாக்கிவிட்டிருக்கிறது!" என்று அந்த ஓலையைப் படித்தபடி சுவடியடிகள் தமக்குத்தாமே சொன்னார்.

"நெருக்கடியான கட்டத்தில் மட்டுமல்ல, ஆபத்தான கட்டத்திலும் இந்த ஓலை என்னைக்கொண்டு வந்து நிறுத்திவிட்டது! பொன்னையாவைத் தூக்கிவிட வேண்டும் என்று தூமகேது கேட்டபோது, அரை குறை மனதோடே நான் 'உமது விருப்பம்போல செய்யுங்கள்!' என்றேன். அன்று முதலே, அவனுக்கு என் மீது, சந்தேகம் உண்டாகியிருக்கிறது. சைவம் வளர இப்படிச் செய்யவேண்டும் அப்படிச் செய்யவேண்டும், இத்தனைப் பேரைத் தண்டிக்க வேண்டும், இன்னின்னாருக்குப் பதவிகள் கொடுத்து, அவர்களைச் சைவத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் அவன் அடிக்கடி வந்து கூறுவான். இப்பொழுது என்ன அவசரம், பிறகு பார்க்கலாம் என்று நான் சொல்வேன். உள்ளத்தில் எழும் கோபத்தை அடக்கிக்கொண்டு, மேலுக்குச் சிரித்துக்கொண்டு வெளியில் செல்வான். என்னைவிட அவனுக்குத்தான் அதிக அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவத்தோடே, என்னிடம் பேசும் நேரங்களில் அவன் பார்ப்பது வழக்கம். தொலைந்து போகட்டும் என்று பல நேரங்களில் ஆத்திரத்தை நான் அடக்கிக் கொள்வேன். ஆனால் சில நேரங்களில் என்னையும் மீறி கோபம் வந்துவிடும்! ஆகவே என்னை ஒழிப்பதற்கான நல்ல சந்தர்ப்பத்தை அவன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான் என்பதில் சந்தேகமே இல்லை. வயிற்றுவலி கொஞ்சமும் குறையவில்லை என்று சொல்லி கொங்கு நாட்டிற்குச் சென்று வருகிறேன் என்று நான் சொன்னபோது, அவன் சிறிதும் தயங்காமல் சரி என்று சம்மதித்தான். அவ்வளவு எளிதில் சம்மதித்துவிட்டதால், அதில் ஏதாகிலும் சூழ்ச்சியிருக்குமோ என்று நான் அப்பொழுதே சந்தேகப்பட்டேன். இப்பொழுது மாறுவேடத்தில் புத்தவிகாரத்தில் நான் தங்கியிருக்கிறேன் என்ற செய்தி அவனுக்குக் கிடைத்தால், அந்தச் செய்திக்கு அவன் எப்படிப்பட்ட உருவம் தருவான் தெரியுமா? இலங்கை அரசனோடு ஏதோ ஒப்பந்தம் செய்துகொள்ளவே, குலசேகரன் புத்தபுரத்தில் போய் இருக்கிறான் என்ற செய்தியை, சோழ மன்னனுக்கு உடனே அனுப்பிவைப்பான். சைவத்திற்கு விரோதியாகிவிட்டேன் என்ற முன்கோபத்தினால், என் முடியைப் பறிக்கவும் அவன் முடிவு செய்துவிடுவான்! இந்த ஓலையினால் இவ்வளவு ஆபத்துகளும் வரலாம்! வந்தால், ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!'

'ஆமாம் தூமகேது அவ்வளவையும் செய்வான்! இராசாதிராசனே, சைவத்திற்கு ஆபத்து என்றால், எந்த பாவத்திற்கும் அஞ்சமாட்டான்!'

'இந்த ஆபத்தைச் சமாளிக்க மார்க்கம் ஏதாகிலும்.........' என்று சுவடியடிகளின் முகத்தை ஆவலோடு குலசேகரன் ஏறிட்டுப் பார்த்தான்.

'அந்தப்பெண் எப்படியிருந்தாள் என்பதைக் கவனித்தாயா?

'ஆமாம் வேங்கை மரத்தின் பக்கத்தில் நின்று அவளை நன்றாகப் பார்த்தேன்! பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது இருக்கும்! அழகான முகம்! மாநிறம்! நடுத்தரமான உயரம்! அவளும் இந்தப் புத்தபுரத்தில்தான் இருக்கிறாள்! அவளை எப்பொழுது வேண்டுமானாலும், என்னால் அடையாளம் தெரிந்துகொள்ள முடியும்!......... அடிகளே! எனக்கொரு யோசனை தோன்றுகிறது!'

'சொல் குலசேகரா!'

'தூமகேதுவின் கையாள் இவள் என்ற உண்மையைக் கூறினால் உடனே இவளைக் கைதுசெய்து சிறையில் தள்ளிவிடுவார்கள் அல்லவா? அதன் பிறகு நான் இங்கு மாறுவேடத்தில் வந்திருப்பதை அந்தத் தூமகேதுவினால் எப்படி அறிய முடியும்?

'தூமகேதுவிற்கு நீ இங்கு வந்திருப்பது தெரியாமல் போனாலும், பராக்கிரமபாகுவிற்குத் தெரிந்துவிட்டால்?'

'அதெப்படித் தெரிந்துகொள்ள முடியும்?'

'அந்தப் பெண்ணைப் பிடித்துச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தால், உண்மையை எல்லாம் கொட்டினாலும் கொட்டிவிடுவாள் அல்லவா?"

"ஆமாம், ஆபத்தை நாமே தேடிக்கொண்டதாகமுடிந்துவிடும். வேறு என்ன செய்வது?" என்று சிந்தித்தவாறு வானத்தைப் பார்த்தான்.

"நம்மோடு வந்திருக்கும் ஆட்களிடம் சொல்லி, இவளைக்கொங்கு நாட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவைக்கும்படிச் செய்தால்" என்று குலசேகரன் சொன்னதைக்கேட்டதும், அடிகள் சிரித்துவிட்டார்.

"இதெல்லாம் என்ன பைத்தியக்கார யோசனை! வழியில் தூமகேதுவின் ஆட்கள் அவளை மீட்டுவிட்டால்?"

"அது எல்லாவற்றையும்விடப் பெரிய ஆபத்தாகிவிடும்!"

"குலசேகரா, எனக்கொரு யோசனை தோன்றுகிறது"

"சொல்லுங்கள்!"

"இந்த ஓலைக்கு பதில் வேறொரு ஓலையை நாம் எழுதி, அந்தப்பாறையின் இடுக்கிலேயே வைத்துவிடலாம்!"

"சரி!......என்னவென்று எழுதுவது!"

"புத்த விகாரத்தில் மதுரைமீது படையெடுப்பதைக் குறித்து

இலங்கை அரசன் தீவிரமாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிருன்—எப்பொழுது தாக்குதல் ஆரம்பிக்கப்போகிருர்கள் என்பது இன்னமும் முடிவாகவில்லை—என்று தமயந்தி எழுதுவதுபோல எழுதிவிடுவது!"

"சில நாட்களுக்கு வேண்டுமானல் ஓலைகளை மாற்றிவைக்கலாம்! என்றைக்காகிலும் ஒருநாள், அவனுக்கு உண்மை தெரிந்துவிடுமே!"

"என் திட்டத்தில் பாதியைத்தான் சொன்னேன் — அதற்குள் அவசரப்படுகிறயே, குலசேகரா! இன்று நான் சொல்லியதைப்போல எழுதி, ஒரு ஓலையை அங்குவைத்துவிடலாம்! நாளை காலையே தூமகேதுவிற்கு, நீ ஒரு ஓலை எழுது!"

"தூமகேதுவிற்கு ஓலை எழுதுவதா?"

"தூமகேதுவை இனிமேல் ஏமாற்றுவது கூடாது! அவசியமில்லாத அந்தப் புதியஆபத்தை, எதற்காக நாம் தேடிக்கொள்ளவேண்டும் 'ஒற்றர் நாயகம் அவர்களே, எனக்கு வயிற்றுவலி சரியாகிவிட்டது! நேரே மதுரைக்குப் புறப்படத்தான்நினைத்தேன். அதற்குள் சேரநாட்டிற்கு மாறுவேடத்தில் சென்று, இலங்கை அரசனும் பௌத்தர்களும்கூடி, என்ன திட்டம் தயாரிக்கிருர்கள் என்பதை அறியவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று! ஆகவே புத்தபுரத்திற்கு வந்திருக்கினேன். நானும் ஒருபௌத்தனைப்போலவே மற்ற பௌத்தர்களோடு பழகவும், புத்தவிகாரத்தில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளவும் வாய்ப்பை உண்டாக்கிக்கொண்டிருக்கிறேன்! அதற்குமுன்பு,சைவத்திற்கு மாறுபட்டவர்களிடத்திலும் அன்போடு நடந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தது என்னவோ உண்மை! புத்தபுரத்திற்கு வந்த பிறகு, அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன்! இல்லைஇல்லை, என்னை மாற்றிக்கொள்ளும்படி இந்தப் பௌத்தர்கள் செய்துவிட்டனர். பௌத்தர்கள் மிகவும் கொடுமையானவர்கள்—கொலைபாதகர்கள்! அவர்களை விட மோசமானவர்கள் இந்த உலகில் வேறு யாருமே இருக்கமாட்டார்கள்! பழகினுல்தான் மனிதனுக்கு அனுபவம் உண்டாகிறது என்கிருர்களே, அது உண்மை என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன்! பாண்டிய நாட்டில் அவர்களைப் பூண்டோடு அழித்தாக வேண்டும்! இன்னும் ஒரு செய்தி, பொன்னையாவின் தங்கையான அஞ்சலையும் இந்தச் சதிக்கூட்டத்தில்தான் இப்பொழுது இருக்கிருள்! எதிரிகளின் பலத்தைப் பூரணமாகத் தெரிந்துகொண்டு, விரைவில் மதுரைக்குத் திரும்பிவிடுகிறேன்!" என்று தூமகேதுவிற்கு ஒரு ஓலைஎழுதி நாளைக்கே அனுப்பிவிடு! மற்றபடி பாண்டிராசனுக்கும் ஒரு ஓலை எழுது! அதன்பிறகு தூமகேதுவிற்கு, ஒற்றர்களின் மூலமாகச் செய்திகிடைத்தால்கூட, அதை அவன் தவருக எடுத்துக்கொள்ளமாட்டான்!" என்று சுவடியடிகள் தம் திட்டத்தைக் கூறினர்.

"நல்ல யோசனை, அப்படியே செய்கிறேன்!" என்று குலசேகரன் சொன்னதும், சுவடியடிகள் எழுந்து புத்தவிகாரத்தினுள் சென்று, ஓலையும் எழுத்தாணியும் கொண்டுவந்து, கையிலிருந்த தமயந்தியின் ஓலைக்கு மாற்று ஓலை எழுதிக்கொடுத்தார்.

"இந்தா இதைஎடுத்துச்சென்று, உடனே அங்கு வைத்துவிடு!" என்று அந்த ஓலையைக் குலசேகரனிடம் தந்தார்.

அவன் சென்ற திசையிலேயே சுவடியடிகள் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்ருர். அவன் உருவம் மறைந்ததும், அவர் புத்தவிகாரத்தினுள் சென்ருர்.

குலசேகரன் அந்தக் குன்றின் அருகே சென்றபோது. வானத்தில் மேகங்களின் சஞ்சாரம் அதிகமாக இருந்தது, ஆகவே மங்கிய வெளிச்சத்தில் அந்தப் பாறையின் இடுக்கைத் தேடிக்கண்டுபிடிப்பது சிறிது சிரமமாக இருந்தது,

ஓலையை அவன் உள்ளே வைத்துவிட்டுக் கையை வெளியே எடுத்தபோது — தூரத்தில் குதிரை ஓடிவரும் சப்தம் கேட்கவே — வேகமாகச் சென்று முன்போல, அதே வேங்கை மரத்தின் பின்னல் ஒளிந்து நின்ருன்.

குதிரையின் குளம்படிச் சப்தம் அருகில் கேட்டது. அவன் கண்களை மிகவும் கூர்மையாக்கிக்கொண்டு பார்த்தான்.

குதிரையை விட்டு ஒரு குள்ளமான மனிதன் குதித்தான். அவன் சீட்டியடித்துக்கொண்டே ஆடிஆடி நடந்துசென்று, இடுக்கிலிருந்த ஓலையை எடுத்துக்கொண்டு, வேருெரு ஓலையை அதனுள்வைத்துவிட்டுக் குதிரையின்மீதேறி வந்த வழியே வேகமாகத் திரும்பிச் சென்ருன்.

அவன் குள்ளமாக இருந்தான் என்பதைத் தவிர, அவன் முகத்தைக் குலசேகரனல் பார்க்கமுடியாமல் போய்விட்டது!

அவன் எந்தத் திசையில் செல்கிருன் என்பதைப் பார்க்க குலசேகரன் குன்றின்மீது தாவியேறினன். எங்கும் ஒரே இருளாக இருந்ததினுல், அந்தக் குள்ள மனிதன் கண்ணுக்கே தெரியவில்லை.

குன்றிலிருந்து கீழே இறங்கி வந்து, அவன் வைத்துவிட்டுப் போன ஓலையைக் குலசேகரன் எடுத்தான். மேகங்களுக்குள்ளே சிக்கிக்கொண்டு நிலவு தவித்ததைப் போலவே, அந்த ஓலையைப் படிக்க முடியாமல் குலசேகரனும் தவித்தான்.

அந்த ஓலையைத் தலைப்பாகையினுள் வைத்துக்கொண்டு, ஏரிக்கரையின்மீது சிறிதுநேரம் உட்காரலாம் என்ற எண்ணத்தோடு, நடந்தான்.

ஏரிக் கரையில் அவன் உட்கார்ந்ததும், மேகக் கூட்டங்களை ஏமாற்றிவிட்டு வெண்ணிலா வெளியே ஓடிவந்தது. தலைப்பாகையினுள் இருந்த ஓலையை எடுத்து, அவசர அவசரமாக அவன் படிக்க ஆரம்பித்தான்.

"தமயந்திக்கு,

நீ அனுப்பிய செய்திகள் ஒழுங்காகக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. சந்தோஷம்.

இப்படிக்கு,
தூமகேது."

அதைப் படித்து முடித்ததும், அவன் ஏரியைப் பார்த்தான். தகதகவென்று மின்னிக்கொண்டிருந்த தண்ணீரைப் பார்த்தபடி, "தமயந்தி இன்னும் என்ன செய்திகளை அனுப்பியிருப்பாள்?" என்று யோசித்துப் பார்க்கத் தொடங்கினுன்.

நிலவு முன்போலவே மேகக் கூட்டத்தினிடையே சிக்கிக் கொண்டது.

"என் வாழ்வும். இந்த நிலவைப் போலத்தான் இருக்கிறது!" என்று முணுமுணுத்தபடி, வானத்திலிருந்த பார்வையை ஏரியில் இறக்கினுன்.

ஏரியில் சிறிது தூரத்தில் ஒரு படகு தெரிந்தது. அது அவன் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கியே வந்துகொண்டிருந்தது.

அந்தப் படகில் ஒரு உருவம் நிற்பது, அந்த மங்கிய வெளிச்சத்திலும் அவனுக்கு நன்ருகத் தெரிந்தது!

2—6

## வேடிக்கையான கேள்வி

ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்த குலசேகரன் எழுந்து நின்றான்.

'படகு என்னை நோக்கி அல்லவா வருகிறது? வருவது யாராக இருக்கும்? என்று சிந்தனையோடு, அத்திசையில் உற்றுப் பார்த்தான்.

படகு ஆடி அசைந்து அவனை நோக்கி மெள்ள வந்துகொண்டிருந்தது. அதிலே நின்றிருந்த உருவத்தின் மேலாடை காற்றோடு விளையாடிக்கொண்டிருந்தது. காதிலும் கழுத்திலும் கற்கள் பளபளவென ஒளி செய்தன.

"படகில் நிற்பவள் பெண் போலத் தெரிகிறதே!......ஆமாம், பெண்தான்! சந்தேகமே இல்லை! இவள் யாராக இருப்பாள்! என்னை நாடி வரக் காரணம் என்ன? ஒரு வேளை குதிரைமீது சென்றாளே அதே பெண்தான், இப்பொழுது படகில் வருகிறாளா?" என்று குலசேகரன் நினைத்துப் பார்த்தான்.

படகிலிருந்த பெண், அவனைப் பார்த்து ஒருகையை ஆட்டினாள். சிறிதுநேரம் அப்படி ஆட்டிவிட்டு, வாயின் அருகே கையைவைத்து 'ஓ! ஓ!' என்று சப்தம் செய்தாள்.

அதேபோல அவனும் சப்தம் செய்துவிட்டு, கையை ஆட்டினான்.

"நான் வரட்டுமா? இப்படியே திரும்பிப் போகட்டுமா?" என்று அந்தப் பெண் குரல்கொடுத்தாள்.

"இவ்வளவுதூரம் வந்துவிட்டு ஏன் போகப்போகிறாய் — வா!" என்று அவன் பதில்குரல் கொடுத்தான்.

"இந்தப் பெண் யாராக இருப்பாள்? நம்மைத் தெரிந்துகொண்டு வருகிறாள் போலிருக்கிறதே!" என்று எண்ணினான்.

"நான் தெரிகிறதா?" என்று அவள் உரத்தக் குரலில் கேட்டாள். வரவர அவள் குரல் தெளிவாகக் கேட்டது.

"இல்லையே!" என்று பதிலளித்தானே ஒழிய, அவன் மனத்தில் மட்டும் ஒரு சந்தேகம் உண்டாயிற்று.

"கொஞ்சம் பொறுங்கள்-மேகத்தில் நுழைந்துகொண்டிருக்கும் நிலவும் வெளியேவந்து எட்டிப்பார்க்கும், என் படகும் கரையை வந்து தொட்டுவிடும்— அப்பொழுது தெரிந்துகொள்வீர் அல்லவா?"

"நான் குருடன் அல்ல! தெரிந்துகொள்வேன்! அது சரி, நான் யார் என்று உனக்குத் தெரிகிறதா?"

"தெரிந்துதானே வருகிறேன்!"

"அப்படியானால் சொல்லேன் கேட்கலாம்!"

"அரிகர புத்திரனை அங்கே மனைவிக்குக் காவல் வைத்துவிட்டு, அர்த்த ராத்திரியில் இப்படி ஊர் சுற்றுவது சரியா?"

"ஓகோ நீதானா?" என்று அவன் சிரித்துக்கொண்டே சொல்வதற்கும், நிலவு வெளியே வந்து ஒளி சிந்துவதற்கும் சரியாக இருந்தது.

வருபவள் திருமேனியாக இருப்பாளோ என்ற சந்தேகம் சிறிது நேரத்திற்கு முன்பு அவனுக்கு உண்டாயிற்று. அந்தச் சந்தேகம் இப்போது உண்மையாகிவிட்டது. அரசிளங்குமரி திருமேனிதான், அன்னப் படகிலே வந்துகொண்டிருந்தாள்.

அன்று மாலை அஞ்சலையும் குலசேகரனும் காட்டில் தனித்துப் பேசிக்கொண்டிருக்கையில், ஆலமரத்தினின்றும் குதித்து வந்து பேசினாள் அல்லவா திருமேனி! அப்பொழுது அவன் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. அந்தச் சந்தேகத்தை வெளியில் காட்டாமலே தான், அப்பொழுது அவன் சிரித்துப் பேசினான். இப்பொழுது வருபவள் திருமேனி என்பதை அறிந்ததும், அந்தச் சந்தேகம் உண்மையா என்று கண்டுபிடிக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதென்று எண்ணினான்.

கரையைவிட்டு இறங்கி நீரிலே நின்றான். படகின் கயிற்றை எடுத்து, திருமேனி வீசியெறிந்தாள். அதை அவன் தாவிப் பிடித்துக்கொண்டு, மெதுவாக இழுத்தான். படகு அருகே வந்ததும், அன்னத்தின் தலைபோலிருந்த அதன் முன்பாகத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அலைகளின் கொந்தளிப்பால் அது நிலைகொள்ளாது ஆடியது.

திருமேனி உட்கார்ந்து, அவன் முகத்தை ஆர்வத்தோடு பார்த்தாள். அந்த வேல்விழிகளின் பிரகாசத்தைத்தான், நட்சத்திரங்கள் இரவல்வாங்கிக்கொண்டனவோ என்று நினைத்தாள். அந்த நினைப்பில், தனக்கு ஏதோ ஓர் தனிப்பட்ட மகிழ்ச்சி இருப்பதாக உணர்ந்தாள்.

அரும்பு போன்ற பற்கள் தெரிய, அவளது அதரங்களிலே ஓர் அழகுப் புன்னகை ஆடி நின்றது.


# மூர்த்தீஸ் டுடோரியல் காலேஜ்

கீழரத வீதி, திண்டுக்கல்.

"அலை அலையாக திரண்டு வரும் மாணவர்களுக்காக"

**P. U. C. S. S. L. C.**

- 4, 5ம் பிரிவுகள் 15—6—66ல் ஆரம்பமாகின்றன.
- இடத்திற்கு முந்துங்கள். வெற்றி நிச்சயம்.
- பெண்களுக்கு தனி வகுப்பு, தனிக் கட்டிடத்தில் நடைபெறுகிறது.
- ஹாஸ்டல் உண்டு. லாப்ரடரி அமைந்துள்ளது.

PRINCIPAL:

**C. RAMACHANDRAN,**

B.COM. GRAD. B.I.M. (LOND)

அந்தப் புன்னகை, அவனது காலடியிலிருந்த தண்ணீரை மெல்லச் சூடாக்கியது.

அந்தக் குமரிப் பெண்ணின் மலர்விழிகளிலே உண்டான அந்த ஆசைப் பார்வையும் —இதழ்படா இதழிலே இருந்து ஒளிசெய்த அந்தச் சுந்தரப் புன்னகையும்—மாறவும் மங்கவுமில்லை! பருவமேனி விரும்பியடங்க அவள் ஒரு பெருமூச்சுவிட்டாள்!

அந்த ஒரு நொடி நேர அசைவைக்கண்டே, அவன் மனத்தில் ஆயிரங் கற்பனைகள் அலைமேல் அலையாய்த் தவித்தன.

'திருமேனி!'

அவனது உதட்டிலே இருந்து நழுவி விழுந்த இந்த வார்த்தை தென்றலிலே மிதந்துசென்றது

ஒரு முல்லைச் சிரிப்பு, ஒரு நீண்ட பெருமூச்சு! அவை தவிர பதிலுக்கு அவளொன்றும் சொல்லவில்லை!

'திருமேனி!'

அவன் கைகள் படகை இன்னும் அருகே இழுத்தன.

இறங்க அவள் எழுந்தாள். ஒரு கையால் படகைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, மற்ருெரு கையை அவளுக்கு ஆதரவாக நீட்டினுன்.

"வேண்டாம் நானே இறங்குவேன்!" என்று குறும்போடு சொல்லிவிட்டு, படகைவிட்டு அவள் கீழே குதித்தாள்.

படகைப் பிடித்து ஒரு பெரிய கல்லில் கட்டிவிட்டு, கரைமீதேறிய திருமேனியை அவன் பின்தொடர்ந்தான்.

'சிறிய கற்களின் மீது காலை வைக்காதே — உருண்டுவிடும்!' என்று வேகமாக ஏறியவளுக்கு எச்சரிக்கை தந்தான்.

"கற்கள் உருளா—போர்க்களத்தில் தலைகள்தாம் உருளும்!" என்று சொல்லிக்கொண்டே, கரைமீதிருந்த ஓர் பெரிய மருதமரத்தின் அடியல் போய் நின்ருள்.

'கற்கள் உருளும் — இலங்கை அரசரின் வெண்குடை உருளா?" என்று சொல்லிவிட்டு, மரத்தின் அடியில் போகாமல் சிறிது தள்ளி நிலவின் வெளிச்சத்திலேயே அவன் நின்ருன்.

கற்கள் உருளா—ககனத்து நிலா உருளும்!" என்று கூறிக்கொண்டே, மரத்தின் நிழலிலிருந்து அவளும் வெளிச்சத்திற்குவந்தாள்.

"ககனத்து நிலவு உருளா—கன்னியரின் கடகம் உருளும்!"

"கன்னியரின் கடகம் உருளுமா? சுத்த தப்பு! சுத்த தப்பு! இதோ பார், என் கையிலே எங்கே உருளுகிறது! கடகம்?" என்று கேட்டுக்கொண்டே, அவன் அருகே வந்து நின்ருள்.

"உருளவில்லையா? இதோ உருளச் செய்கிறேன்!" என்று அவன் கையை நீட்டியதும், அவள் ஓரடி பின்னுல் நகர்ந்து நின்ருள்.

"என்ன தொடப் பார்க்கிறீர்? தொட்டால் என்ன ஆவீர் தெரியுமா?"

"தெரியும்! என் தலை சுக்கு நூருகச் சிதறிவிடும்!"

"சுத்தத் தப்பு! என் தலை சுக்கு நூருகச் சிதறிவிடும்!"

"உண்மையாகவா?"

"எதற்காகப் பயப்படுகிறீர்? பயப்பட வேண்டாம்? எனது தலை தானே வெடித்துவிடும்—போனுல் போகட்டும்! அதற்கெல்லாம் நான் கவலைப்படுபவள் அல்ல! தலை தானே போகப்போகிறது, போகட்டும்; பிறகு கழுத்தில்லையா, கையில்லையா, கால் இல்லையா—அவை போதாதா?"

"தலை போய்விட்டால் பிறகு நீ எங்கிருந்திருப்பாய்?'

"சரியான சமயத்தில் நினைவுபடுத்தினீர்! தலை போய்விட்டால் நான் எங்கிருந்து இருப்பேனு? சொல்லுங்கள், இப்பொழுது நான் எங்கிருக்கிறேன்?!'

"இதென்ன கேள்வி? ஏரிக்கரையின் மீது இருக்கிருய்!"

"நானு ஏரிக்கரையின் மீதிருக்கிறேன்—என் கால்தானே இருக்கிறது! அது இருக்கட்டும், இதற்குப் பதில் சொல்லுங்கள்! இது என்ன?"

"அதுவா? உனது காது!"

"எனது உனது என்று சொல்லாதீர்கள்! திருமேனியின் காது என்று சொல்லுங்கள்!"

"சரி திருமேனியின் காது!"

"இது?"

"மூக்கு!"

"யாருடைய மூக்கு—உம்முடையதா? திருமேனியின் மூக்கு என்று சொல்லுங்கள்!"

"சரி! திருமேனியின் மூக்கு!"

"இது என்ன?"

"திருமேனியின் கன்னம்!"

"இது?"

"திருமேனியின் கண்!"

"இது?"

"திருமேனியின் கை! திருமேனியின் தோள்! திருமேனியின் இடை! ............... இப்பொழுது என்ன அதற்கு?"

"பார்த்தீரா — கொஞ்சம்கூட பொறுமை இல்லையே தங்களிடம்! வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்துவிட்டீர்களே! நான் எதற்காக ஒவ்வொன்ருகக் கேட்டுக் கொண்டு வந்தேன்—நான் என்ன பைத்தியக்காரியா?"

"அந்தச் சந்தேகம்தான் எனக்கும்!"

"என்ன?"

"ஒன்றுமில்லை! நீ கேள் நான் சொல்லுகிறேன்!'

"இது என்ன?"

"திருமேனியின் விரல்!"

"சரி நான் கேட்ட ஒவ்வொன்றுக்கும், திருமேனியினுடையது என்று சொல்லிக்கொண்டு வந்தீர்கள் அல்லவா?

"ஆமாம்"

"அப்படியனுல் அந்தத் திருமேனி யார்?"

இந்தக் கேள்வி குலசேகரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. எதிரில் இருப்பது திருமேனி இல்லையா?......அவன் தலை சுழன்றது......

எதிரே சிரிப்பொலி கேட்டது.

(வளரும்)

**காரணம் புரிகிறதா?**

அதைச் செயவோம், இதைச் செய்வோம் என்று சொல்லி மக்களின் ஆசையையும் முதலீடு செய்வோரின் ஊக்கத்தையும் கிளப்பிவிட்டு, போட்ட மூலதனம் வீணுகும்படியான நிலைமை ஏற்பட்டதால்தான் இப்போது ரூபாயின் மதிப்பைக் குறைக்கும்படி ஏற்பட்டது.

தினமணி (9-6-66 தலையங்கம்)

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை